பாதஹேவாஹெட்ட பிரதேச சபை
கண்டி மாவட்டம்

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பாதஹேவாஹட்டபிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 958,970 பெறுமதியான 06 நிலையான சொத்து உருப்படிகள் மற்றும் ரூபா 177,131 பெறுமதியான அலுவலக மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 இறுதி கணக்குளினூடாக சரி செய்கிறென். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட உரையாடல் தொகுதியின் பெறுமதி ரூபா 1,331,685 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 இறுதி கணக்குளினூடாக சரி செய்கிறென். |
| (இ) | அன்பளிப்பாக கிடைத்த மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா1,200,000 ஆன 02 காணி துண்டுகள், அன்பளிப்பாக கிடைத்த உறுதி இலக்கம் 234 காணியின் பெறுமதி, லூல்கந்துர சுற்றுலா வசதிகள் மய்யத்தின் ரூபா 5,957,538 ஆன நிர்மாண பெறுமானம் மற்றும் தெல்தொட்ட பிரதேச உப அலுவலக பழுதுபார்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 902,439 இனை மூலதனமாக்கி இருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 இறுதி கணக்குளினூடாக சரி செய்கிறென். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆர்பிகோ குழாய் (02'') 985 இனது பெறுமதிரூபா 1,689,275 நிதிக் கூற்றுகளில் நீர் களஞ்சிய இருப்பாக இனங்காண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 இறுதி கணக்குளினூடாக சரி செய்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகாரம் மீதிகளிடையில் ரூபா 90,603 இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளின் வித்திதயாசத்தை இணக்கம் செய்து கணக்குகளை சீர் செய்ய வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 10,516,240 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான ரூபா 48,129,236 உம் பெற வேண்டியதாக இருந்தது. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உறுதி அல்லது ஒப்படை கட்டளை,மதிப்பிட்டறிக்கை போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 17,614,207 ஆன கொடுக்கல் வாங்கல்களைகணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | நிலையான சொத்து மதிப்பீட்டிற்காக கணிப்பாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டு, தற்போது செயற்பட்டு வருவதுடன், முற்பணத் தொகையை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான முன் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்ட | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | சபை பராமரிக்கும் பாதைகள் மற்றும் ஒழுங்கைகள் தொடர்பாக பெயர் பட்டியலொன்று பேணப்படவில்லை. | சட்டம் பிரகாரம்,பெயர் பட்டியலொன்று பேணப்பட வேண்டும். | பாதைகள் பதிவேட்டை தயாரித்து பின்னர் பதிவேட்டை பேணுகிறேன். |
| (ii) | 126(xxx) ஆம் பிரிவு | முறையான அங்கீகாரமின்றி காட்சிப்படுத்தப்பட்டிருந்த 51 விளம்பரப் பலகைகளிலிருந்து கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டம் பிரகாரம்,விளம்பரப் பலகைகளை இனங்கண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (iii) | 154(1) ஆம் பிரிவு | காணி விற்பனை தொகையிலிருந்து அறவிட வேண்டிய வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டம் பிரகாரம், காணி விற்பனை மீது அறவிடும் 1 சதவீத கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், பதிலளிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | 158 ஆம் பிரிவு | நிலுவை ஏக்கர் வரி தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்தை நீண்ட காலம் நிலுவையாக்கவிடாது காலத்திகேற்ப அறவிட வேண்டும். | ஆய்வொன்றை மேற்கொண்டு சொத்துக்களை இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| | 218 ஆம் விதி | காணி மற்றும் கட்டிடங்கள் | காணி மற்றும் கட்டிடங்களை | ஆரம்ப நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணிப்பாய்வொன்று செய்து இனங்காண வேண்டும். | மேற்கொள்ளப்படுகின்றன. |
| (இ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி மீதான விஷேட ஏற்பாட்டு சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 திகதிய 434 இலக்க பொது நிதி சுற்றறிக்கை. | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை வீத வரி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீத வரி அறவிடும் ஆதனங்களை 05 ஆண்டுகளிற்கு ஒரு முறைமதிப்பீடு செய்ய வேண்டும். | புதிய மதிப்பீடொன்றை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 32,598,203 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,037,388 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 2,457,319 | 2,257,124 | 2,248,475 | 6,484,677 | 11,354,482 | 10,061,875 | 8,466,490 | 22,728,124 |
| ii | வாடகை | 4,102,089 | 3,441,900 | 3,733,878 | 702,776 | 3,729,356 | 3,921,109 | 4,315,015 | 886,610 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,131,325 | 2,907,999 | 2,577,599 | 2,369,700 | 5,333,250 | 2,404,587 | 2,404,587 | - |
| iv | ஏனைய வருமானம | 36,927,188 | 41,463,018 | 13,904,751 | 84,234,185 | 29,099,540 | 28,007,204 | 13,758,995 | 50,296,617 |
| | கூட்டுத் தொகை | 47,617,921 | 50,070,041 | 22,464,703 | 93,791,338 | 49,516,628 | 44,394,775 | 28,945,087 | 73,911,351 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீத வரி | | |
| (i) | நீண்ட காலமாக அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,533,458 ஆன நிலுவை வீத வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைவீத வரி மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பணத்தை நிலுவையின்றி அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | சபையின் முன்னேற்ற பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்.'. கட்டிடங்களை இனங்கண்டு வீத வரி அறவிட நடவடிக்கை எடுக்கப் படவில்லை. | முன்னேற்றிய பிரதேசங்களை இனனங்கண்டு வீத வரி அறவிட வேண்டும். | பதில் வழங்கபடவில்லை. |
| (ஆ) | நீர் கட்டணம் | | |
| (i) | பஸ்கம நீர் கருத்திட்டத்தில் 09 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 54,570 ஆன நீர் கட்டண தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீலுவை நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். | நடமாடும் சேவைகள் மூலம் நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | முதுனகடே நீர் உததேச திட்டத்தின் கீழ் பயன் பெற்ற பாவனையாளர்கலிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,409,142 ஆன நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் கட்டணத்தை பதிவழிக்க விடய பொறுப்பு அமைச்சரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தலாதுஓய 03 இலக்க கடையறை வாடகையாளரிடமிருந்து 2014 மே 05 திகதிகு அறவிட வேண்டிய ரூபா 231,410 தொகையை அறவிட நவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடை வாடகையை நீண்ட காலம் நிலுவையாக விடுடாது, அறவிட தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். | இக் கடை யறையிற்காக சட்ட நடவடிக்கையொன்று காணப்படுகிறது. |

2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாரஸ்ஸன நகரில் 10 வியாபாரங்களிற்கு வியாபார அனுமதிப்பத்திரம் பெற கட்டணம் செலுத்தப்பட்ட போதும், அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படவில்லை. | குறித்த அனுமதிப்பத்திரமங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு அறிவூட்டப்பட்டுள்ளனர். |

2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முச்சக்கர வண்டி கட்டணம் | | |
| 2018 திசெம்பர் 31 திகதியிற்கு 446 முச்சக்கர வண்டிகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,671,550 அறவிட றடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முச்சக்கர வண்டி கட்டண அறவீட்டு செயலாற்றளை அதிகரிக்க வேண்டும். | சட்ட ரீதியாக செயற்பட நடவடிக்கை எடுக்கபடுகிறது. |
| (ஆ) விளம்பர பலகை வருமானம் | | |
| தலாதுஓய வலயத்திற்குரிய 15 விளம்பர பலகைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 76,821 கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறிவித்தல் பலகைகள் மூலம் கட்டணம் அறவிட வேண்டும். | விளம்பர பலகை கட்டணம் அறவிட விளம்பர பலகை நிறுவனங்களிற்கு எழுத்துமூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (இ) ஒளிபரப்பு கோபுர கட்டணம் | | |
| ஒளிபரப்பு கோபுரம் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆய்வொன்றை மேற்கொண்டு அறவிட வேண்டிய் கட்ணத்தை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை ஏடுக்கிறேன். |

2.2.6 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டியதாக இருந்தநீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்முறையே ரூபா 1,328,450 மற்றும்ரூபா 64,018,942 ஆனது. | நிலுவைநீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட வேண்டும். | 2019 .03.15 திகதிக்கு கிடைத்த நீதிமன்ற தண்டப்பணம்ரூபா 3,191,170 மற்றும் 2019.04.23 திகதிக்கு கிடைத்த நீதிமன்ற |

தண்டப்பணம்ரூபா 350,500 ஆகும். முத்திரைக் கட்டணத்திற்காக 2019 மார்ச் மாதம் ஒரு தொகை பணம் கிடைத்துள்ளது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாநாவித வேலைகளிற்காக மீளாய்வாண்டில் ஒதுக்ககப்பட்ட ரூபா 2,877,000 யலிருந்து ரூபா 2,489,025 அல்லது, 87 சதவீதம் குறித்த விடயங்களிற்காக செலவிடப்பட்டிருந்தது. | பொது மக்கள் நலனிற்கான ஒதுக்கீட்டு நிதியங்களை உச்ச நிலையில் பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில், இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபடுத்த ரூபா 200,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும், அவற்றை நடைமுறைபடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில், இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக திட்டமெமான்று | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக திட்டம் தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில்,தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபை செயற்படுத்தும் உடுவெல, காப்பறை மற்றும் கொலபிஸ்ஸ நீர் கருத்திட்டங்களின் 280 நீர் மாணிகள் செயலிழந்துள்ளதால், சரியான நீர் கட்டணத்தை அறவிட முயாதிருந்தது. | செயலிழந்துள்ள நீர் கருத்திட்டத்திற்காக நீர் மாணி பொருத்தி, சரியான நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். | நீர் மாணி கொள்வனவிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கிடைத்தவுடனே பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 08 நீர் கருத்திட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,372,260 தொகை அறவிடப்படவில்லை. | அறவிட வேண்டிய நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். | நடமாடும் சேவை நடாத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 15 பதவிகளில் 56 வெற்றிடங்கள் மற்றும்தொழில்நுட்ப அலுவலர்(சிவில்) பதவியில் மிகையொன்றும் நிலவியது. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் கீழ்செயற்பட வேண்டும். | ஆரம்ப நிலை 29 பதவிகளிற்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள துடன், 07 பதவிகளை ஆட்சேர்க்க வர்த்தமானி பத்திரம் தயாரிக்கப்பட்டு,அங்கீ காரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | கண்டி மாநகர சபைக்கு இடமாறி சென்ற அலுவலர் ஒருவரிடடம் அறவிட வேண்டிய ரூபா 160,854 கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்படவில்லை. | இடமாறி சென்ற உடனே கடன் மீதியை தீர்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் மீதியை அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்கு சொந்தமான இடுகாடு, பொது கிணறு, சிகிச்சை மத்திய நிலையம் காணி மற்றும் அவற்றின் உரிமையை தெளிவாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரிமையை தீர்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி, கட்டிடங்களை கணிப்பாய்வூடாக தெளிவாக இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காணி பிரிக்கப்படுவதால் சபைக்கு கிடைக்கும் காணி தொடர்பான தகவவல்களை உள்ளிட்ட பதிவேடொன்று நடாத்தப்படவில்லை. | சபைக்கி கடைத்த காணி துண்டுகளை சரியாக இனங்கண்டு பதிவேடொன்று நடாத்தப்பட வேண்டும். | விடய பொறுப்பு அலுவலரினால் தயாரிக்கப்படுகிறது. |
| (இ) | கந்துரட்ட சந்தெல்ல பிரிக்கப்படும் காணியில் பிரதேச சபைக்கு உரிய இலக்கம் 13 மற்றும் 40 காணி துண்டுகள் மேடு மற்றும் பள்ளத்துடன்கூடிய பிரதேசத்தின் ஓரத்தில் பெற்றிருந்ததால், பொது வசதிகளிற்காக பயன்படுத்த முடியவில்லை. | பொது வசதிகளிற்காக பயன்படுத்தகூடிய காணி துண்டொன்றை சபையினால் பெற்றுக் கொண்டு அங்கு பொது வசதிகளை வழங்க வேண்டும். | காணி கணிப்பாய்வினூடாக இனங்கண்ட பின்னர் வேலி எல்லைகளை தீர்ப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 1994-2012 காலபகுதியில் வாடகைக்கு வழங்கிய 64 கடைகளின் வாடகை ஒப்பந்தங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கலஹா திறந்த சந்தையில் 03 திறந்த கடைகள் ஒப்பந்தமின்றி 10 வருடங்களை விஞ்சிய காலமாக வெளிதரப்பினரிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு வழங்க முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது கிடைத்த பின்னர் முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 சொத்துக்களிலிருந்த பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 08 நீர் உத்தேச திட்டங்களின் 2547 பாவனை அலகுகளிற்கு மாணியின்றி நிலையான நீர் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | மாணி பொருத்தப்பட்டு சரியான நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் மாணிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அது கிடைத்த உடன் பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கந்துரட்ட சந்தெல்ல காணி பிரிப்பின் கீழ் சபைக்கு கிடைத்த 02 காணித்துண்டினுள் நன்கு பலன் தரும் 50 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் இருந்த போதும்,அவற்றிலிருந்து சபைக்கு வருமானமொன்றை பெற்றுக்கொள்ள | வருமானம்ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையான சொத்து கணிப்பாய்வின் மூலம் இனங்கண்டதன் பின் முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

நடவடிக்கை எடுக்காது, காணியை புற்கள் வளரவிடப்பட்டிருந்தது.

3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரிக்கப்பட்ட 06 காணிகளிலிருந்து கிடைத்த காணித் துண்டுகளிற்கான உறுதிகளை சவையினால் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அன்பளிப்பாக கிடைத்த காணித் துண்டுகளை முறையான உறுதியொன்றின் மூலம் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்களின் கணிப்பாய்வின் மூலம் இனங்கண்டு முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.4 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2015 பெரவாரி 06 திகதி சபைக்கு வழங்கப்படடிருந்த ரூபா 17,649,179 பெறுமதியான பெகோ லோடரை மீளாய்வாண்டில் 11 நாட்கள் 49.4 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 577,181 மேற் கொள்ளப்பட்டிருந்தது. | வானங்களை உச்ச பயன்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும். | பெகோ லோடரிற்காக நிரந்தர சாரதியொருவர் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் உச்ச பயன்பாட்டுடன்ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 703,000 பெறுமதியான 03 நிலையான சொத்து உருப்படிகள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்கள் விளைவற்று அல்லதுகுறைபயன்பாட்டிற்குட்பட நடவடிக்கை மேற் கொள்ளக் கூடாது. | 2018 பண்டக ஆய்வின் மூலம் 03 டெக்டர் டேலர்களை விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபையின் இருப்பு பதிவேட்டை மாதிரி பரிசீலனை செய்யும் போது, 03 ஆண்டுகளும் 05 ஆண்டுகளும் இடையிலான காலத்தினுள் விநியோகிக்கப்படாத,ரூபா 200,029 பெறுமதியான 336 நீர் உதிரிப்பாக அலகுகள் விளைவற்று நிலவின. | பண்டக இருப்புக்கள் விளைவற்று நிலவாமல் கவனமெடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், பதில் வழங்குகிறேன். |

3.6 பெறுகைகள்

3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதன செலவினமாக ரூபா 38,012,125மேற்கொள்ளப்பட்டிருந்த போதும்,பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில், பதில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.6.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மஹ/உடபிடிய அல்ஹுஸ்னா மகா வித்தியாலய முன் பகுதி நிலம் விரிப்புக் கல் பரத்தி அபிவிருத்தி செய்யும் வேலை | | |
| வேலைக்குரிய ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம், 109.8 வர்க்க மீட்டர்கள் உள்ளடங்கும் வகையில் 25 N/mm2 சக்தியுடள் கூடிய நிலத்தில் கல் பரப்புதல் மேற் கொள்ள வேண்டிய போதும், பயன்படுத்தப்பட்ட கற்களின் சக்தி 19.08 – 20.09 இற்கிடையிலான வித்தியாசமானதால், நியமத்துடன் அல்லாத மூலப்பொருள் பாவனையிற்கு ரூபா 251,479 செலுத்தப்பட்டிருந்தது. | அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்படும் அளவுகளில் மற்றும் தரத்தின் அறிகுறிகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | 80mm உயரம் 25n/mm2 இற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும்,பரப்பப்பட்டுள்ள கற்கள் 70mm மற்றும்அன்னளவாக 20n/mm2 ஆவதால், சந்தை விலைகளை கருத்திற் கொண்டு ஏற்படும் நட்டத்தை தவிர்த்துக் கொள்ள பட்டியலில் குறித்த சதவீதத்தை குறைத்துக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படடுள்ளது. |